# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 132 /பேரூ/2025**
**நாள் : 09.07.2025**

த. பாப்பு அம்மாள்,
உடன்குடி,
தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, வடக்கு காலன் குடியிருப்பு, கதவு எண். 1/11பி, பள்ளிக்கூட தெரு என்ற முகவரியை சேர்ந்த த. பாப்பு அம்மாள் என்பவரின் 30.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2025 அன்று பெறப்பட்டு, 132/பேரூ/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

<u>**ஆணை**</u>

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, வடக்கு காலன் குடியிருப்பு, கதவு எண். 1/11பி, பள்ளிக்கூட தெரு என்ற முகவரியை சேர்ந்த த. பாப்பு அம்மாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:

கடந்த வருடம் டிசம்பர் 26ஆம் தேதி 2024 அன்று எனது இரண்டு காளை மாடுகளையும் ஒரு பசு மாட்டையும் சிதம்பர தெரு பேருந்து போக்குவரத்து அனுமதி இல்லாத சாலையில் பரணி மோட்டார்ஸ் தோட்டக்காட்டு பகுதியில் வைத்து பஞ்சாயத்து ஊழியர்கள் சாலையோரம் சுற்றித்திரிந்த மாடுகள் என்று சொல்லி இரவு 8 மணி அளவில் குப்பைகளுடன் டிராக்டர் வண்டியில் ஏற்றி சென்றனர். எங்கள் ஊரில் உள்ளவர்கள் எங்களிடம் இந்த மாதிரி மாடு பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னதனால் நாங்கள் அங்கு சென்று பார்த்தோம். எங்கள் மாடுகளை எங்களிடம் கொடுக்குமாறு பஞ்சாயத்து ஊழியர்களிடம் கேட்டோம். அதற்கு அவர்கள் எனது மகனிடம் (த. சக்தி குமார்) ஒரு மனு ஒன்றை எழுதிக் கொடுத்து பசு மாட்டை மட்டும் எங்களிடம் ஒப்படைத்தனர். அந்த மனுவில் சாலையோரம் சுற்றித் திரிந்த மாடுகள் என்று

எழுதிக் கொடுக்குமாறு கட்டாயப்படுத்தி மனு வாங்கினர். அதற்கு சாட்சியாக ஊரில் உள்ள நான்கு பேரிடம் கையெழுத்து வாங்கினர். அந்த மனுவில் இனிமேல் எங்களது மாடுகள் வெளியே சாலையோரம் சுற்றித் திரிந்தால் என் மேல் வழக்கு தொடரலாம் என்று கட்டாயப்படுத்தி எழுதி வாங்கினர்.

போக்குவரத்திற்கு இடையூறாக சுற்றித் திரியும் மாடுகளை பிடிக்காமல் கடமைக்கு காட்டு பகுதியில் படுத்து கிடந்த மாடுகளை இரவு நேரத்தில் பிடித்து சென்றனர்.

எனது இரண்டு காளை மாடுகளை வண்டியில் ஏற்றிச் செல்லும் பொழுது மாட்டை கோசாலைக்கு கொண்டு செல்கிறோம் என்று கூறினர், அப்பொழுது மாடு பிடிப்பவர் கருப்பன் என்ற சுடலை என்பவர் எனது மாட்டின் காலை உடைப்பேன் என்று சொன்னார்.

அன்று இரவே எங்களது இரண்டு காளை மாடுகளை கோசாலைக்கு கொண்டு செல்லாமல் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு கொண்டு சென்று ஒரு மாட்டின் காலை உடைத்து விட்டனர். அந்த வீடியோ எங்களிடம் உள்ளது. மாட்டின் காலை உடைத்த வீடியோ எங்களிடம் உள்ளதால் எனது மகன் மீதும் எங்கள் ஊரில் உள்ள நடராஜா என்பவர் மீதும் குலசேகரன்பட்டணம் காவல் நிலையத்தில் பொய்யான வழக்கு பதிவு செய்தனர். (CRIME No.304/2024)

அன்று இரவு நாங்கள் எங்களது மாட்டின் காலை உடைத்ததனால் குலசேகரப்பட்டணம் காவல் நிலையத்தில் பஞ்சாயத்து ஊழியர்கள் மீது மனு ஒன்று கொடுத்தோம். (CSR No.823/2024)

அடுத்த நாள் காலையில் நாங்கள் பஞ்சாயத்து அலுவலகத்தில் மாட்டுக்கு அபராதம் செலுத்த சென்ற பொழுது செயல் அலுவலர் அவர்கள் உங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. எனவே காவல் நிலையம் சென்று மாடுகளை வாங்கிக்கொள்ளவும் என்று மாடுகளை தர மறுத்தனர்.

எனது கணவருக்கு 70 வயது ஆகிறது, வயதான நாங்கள், ஆடு மாடுகளை வைத்துதான் பிழைப்பு நடத்தி வருகிறோம். தற்போது இந்த பிரச்சனையினால் வாழ்வாதாரம் இன்றி தவித்து வருகிறோம்.

இவ்வளவு நாள் தாமதமானதற்கு காரணம் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் நேரிலும், தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர அவரிடம் கோரிக்கை வைத்தோம். ஆனால் எந்த ஒரு பயனும் இல்லை. பிரச்சனையை தீர்த்துக் கொடுக்கவில்லை.

பின்னர் கலெக்டர் அலுவலகத்தில் எனது மகன் மனு ஒன்று கொடுத்தார். அதற்கு ஒரு வாரத்தில் பதில் வந்தது. நாங்கள் மாடுகளை பணம் கட்டி வாங்கி விட்டதாக டிஎஸ்பி அலுவலகத்தில் தகவல் அனுப்பி இருந்தனர்.

நாங்கள் இன்றுவரை எங்களது மாடுகளை வாங்கவில்லை. இரண்டாவது மனு ஒன்று கலெக்டர் அலுவலகத்தில் கொடுத்தோம். ஆனால் அதற்கு டிஎஸ்பி அலுவலகத்தில் இருந்து மாடுகளை அபராத தொகை கோசாலையில் கட்டி மாடுகளை பெற்றுக்கொள்ளுமாறு பதில் அளித்தனர்.

இப்போது நான் உங்களுக்கு இந்த பிரச்சனையை எனக்கு முடித்து தருமாறு தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். என்னிடம் ஆதாரமாக வீடியோ உள்ளது. எனது இரண்டு கால்நடைகளையும் மீட்டு தரவும், மேலும் நஷ்ட ஈடு பெற்றுத் தரவும், பஞ்சாயத்து ஊழியர்கள் மீது பணி ரீதியாக தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.05.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக சுற்றியும் உயிர்சேதம் ஏற்படும் வண்ணம் திரியும் கால்நடைகளை பிடித்து அப்புறப்படுத்துமாறு தொடர்ந்து பொதுமக்களிடமிருந்தும், பத்திரிக்கை செய்திகளில் புகார் வெளி வந்ததன்படி பேரூராட்சி நிர்வாகம் தொடர்ந்து கால்நடை வளர்ப்பவர்களுக்கு அறிவிப்பு வழங்கியும் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தப்பட்டும் சுகாதார மேற்பார்வையாளரால் மாடு வளர்ப்பவர்களுக்கு நேரடியாக அறிவுறுத்தப்பட்டும் அதனையும் மீறி சாலையில் சுற்றித்திரிந்த மாடுகளை பேரூராட்சி மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 106(2)-இன்படி அப்புறப்படுத்தும் பணி நடைபெற்றது. அப்போது உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி வார்டு எண். 1 சிதம்பர தெரு நெடுஞ்சாலை துறைக்கு பாத்தியப்பட்ட சாலையில் சுற்றித்திரிந்த 2 காளை மாடுகளை 26.12.2024 அன்று பிடித்து அதனை குலசேகரப்பட்டணம் முத்தாரம்மன் கோசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அப்போது திரு. சக்திகுமார் மாட்டின் உரிமையாளர் எனக் கூறி அங்கு வந்த மற்றொரு நபர் திரு. நடராஜன் ஆகியோர் பேரூராட்சி பணியாளர்களை பணி செய்யவிடாமல் தடுத்தும், பணியாளர்களை தாக்கியும் அவதூறாக பேசியும் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட காரணமாக இருந்ததனால் குலசேகரப்பட்டணம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண். 304/2024 நாள் 27.12.2024 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து திரு. சக்திகுமார் என்பவரால் தனது மாடுகளை திரும்ப வழங்குமாறு விண்ணப்பம் செய்யப்பட்டது. அச்சமயம் பல்வேறு நபர்களிடமிருந்து தொலைபேசியில் தனது கால்நடைகளை விடுவிக்குமாறு ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அச்சமயம் திரு. சக்திகுமார் என்பவரும் கால்நடையை உரிமை கோரியதால், அதனை உறுதிப்படுத்தும் விதமாக தங்களுக்கு சொந்தமான கால்நடை என்பதற்குரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. ஆனால் எவ்வித ஆவணங்களும் மேற்படி நபரால் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனைத் தொடர்ந்து திரு. சக்திகுமார் என்பவரால் மீண்டும் விண்ணப்பம் செய்யப்பட்டதன்படி தங்களுக்கு சொந்தமான கால்நடை என்பதற்குரிய ஆவணங்களுடன் உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முத்தாரம்மன் கோசாலை பசு பாதுகாப்பு சங்கச் செயலரும் ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தத்தின்படி கோசாலைக்கு செலுத்த வேண்டிய பராமரிப்பு செலவு மற்றும் மருத்துவச் செலவு உட்பட நாள் ஒன்றுக்கு ரூ.1450/ வீதம் 27.12.2024ஆம் தேதி முதல் 28.01.2025 வரை 33 நாட்களுக்கு ஒரு மாட்டிற்கு இதுவரை ஆகிய பராமரிப்பு தொகை ரூ.47850/- வீதம் இரண்டு மாட்டிற்கு ரூ,95,700 முத்தாரம்மன் கோசாலை பசு பாதுகாப்பு சங்கம் என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்து கடிதம் வழங்கப்பட்டு அதற்கான ஒப்புதலும் மேற்படி நபரால் வழங்கப்பட்டது.

இந்நிலையில் 26.12.2024 அன்று பேரூராட்சி வாகனத்திலிருந்து கால்நடைகளை இறக்கிய போது காளை மாடு மிரண்டு வாகனத்திலிருந்து குதித்தபோது ஒரு காளை மாட்டிற்கு முன்புற வலது பக்கம் கால் எதிர்பாராதவிதமாக எலும்பு முறிவு ஏற்பட்டது. உடனடியாக அரசு கால்நடை மருத்துவர் மூலம் மருத்துவ சிகிச்சை செய்து குலசேகரப்பட்டணம் கோசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து காய்ச்சல் ஏற்பட்டதால் தொடர் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து காய்ச்சல் இருந்து கொண்டே இருந்ததால் அரசு மருத்துவரின் ஆலோசனையின்படி எலும்பு முறிவு ஏற்பட்ட பகுதியினை அகற்றிட தெரிவிக்கப்பட்டு மேல்சிகிச்சை செய்யப்பட்டு நல்ல முறையில் இருந்து வந்தது . இந்நிலையில் 09.04.2025 அன்றைய தினம் மேற்படி காளை மாடு உயிரிழந்தது. அதனை உடற்கூராய்வு செய்யப்பட்டதில் மாட்டின் வயிற்றில் 4 கிலோ அளவில் பிளாஸ்டிக் கழிவுகள் இருந்ததாகவும் அதனால் செரிமானம் பிரச்சனை ஏற்பட்டு உயிரிழந்ததாக அரசு மருத்துவர் மூலம் உடற்கூராய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரிடம் தொடர்ந்து கால்நடைகளை தங்களது இடத்திற்குள்ளேயே அடைத்து வளர்க்குமாறு அறிவுறுத்தி வந்தும் அஜாக்கிரதையாக உயிர்பலி ஏற்படுத்தும் நோக்கிலேயே மீண்டும் கால்நடைகளை நெடுஞ்சாலைத் துறை சாலையிலும் பேரூராட்சிக்குட்பட்ட சாலையிலும் திரிய விடுவது வழக்கமாக உள்ளது. மேலும் உண்மைக்கு புறம்பான தகவல்களை மனுதாரரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 03.06.2025 அன்று இம்முறைமன்ற நடுவ அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.05.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் த. பாப்பு அம்மாள் என்பவர் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அதிக தூரம் பயணம் செய்ய முடியாது என்பதால் தனது சார்பாக தனது மகன் த. சக்திவேல் என்பவரை விசாரணைக்கு அனுமதிக்குமாறு வேண்டி 02.06.2025 நாளிட்ட மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

6. மனுதாரரின் கோரிக்கையை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, அதன்படி மனுதாரர் திருமதி. த. பாப்பு அம்மாள் என்பவரின் மகனான திரு. த. சக்திகுமார் என்பவர் 03.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட சிதம்பரம் தெருவில் பரணி மோட்டார்ஸ் தோட்டக்காட்டு பகுதியில் எங்களுக்கு சொந்தமான படுத்திருந்த 2 காளை மாடுகள் மற்றும் 1 பசு மாட்டினை போக்குவரத்திற்கு இடையூறாக சாலையில் சுற்றி திரிந்ததாக 26.12.2024 அன்று இரவு 8 மணி அளவில் பேரூராட்சியால் முறைகேடாக பிடிக்கப்பட்டு, கோசாலைக்கு கொண்டு செல்கிறோம் எனதெரிவித்தனர்.
- எங்களிடம் மாடுகள் தெருவில் சுற்றிதிரிந்ததாக கட்டாயப்படுத்தி, மனு அளித்ததின் பேரில் பசு மாட்டினை திரும்ப ஒப்படைத்தனர். ஆனால் 2 காளை மாடுகளையும் கோசாலைக்கு கொண்டு செல்லாமல் பேரூராட்சி அலுவலகத்திற்கு அழைத்து சென்று 1 காளை மாட்டின் காலை உடைத்து உள்ளனர்.

- காளை மாட்டின் காலை உடைக்கும் போது ஒருவர் வீடியோ எடுத்ததால், பேரூராட்சியினர் என் மீது காவல் நிலையத்தில் புகார் செய்து வழக்கு பதிவு செய்தனர். நாங்களும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம்.

- 27.12.2024 அன்று காலையில் மாட்டுக்கான அபராத கட்டணம் செலுத்த பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்றபோது காவல் நிலையத்தில் தங்கள் மீது புகார் அளிக்கப்பட்டு உள்ளதால், காவல் நிலையம் சென்று மாடுகளை வாங்கிக் கொள்ளுமாறு தெரிவித்து மாடுகளை தர மறுத்தனர்.

- இதனைத் தொடர்ந்து டி.எஸ்.பி. அலுவலகத்தினை தொடர்பு கொண்டதில் மாடுகளுக்கான அபராதத் தொகையினை கோசாலையில் கட்டி மாடுகளை பெற்றுக் கொள்ளுமாறு டி.எஸ்.பி. அலுலகத்தில் தெரிவித்தனர்.

- இந்நிலையில், 30.12.2024 மற்றும் 28.01.2025 நாளிட்ட விண்ணபப்பங்களில் எங்களது காளைமாடுகளை திரும்ப வழங்கக் கோரியதில் உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 28.01.2025 நாளிட்ட கடிதத்தில் 27.12.2024 முதல் 28.01.2025 வரை 33 நாட்களுக்கு ஒரு காளைமாட்டிற்கு பராமரிப்பு செலவினம் ரூ.47,850/- வீதம் இரண்டு மாடுகளுக்கு ரூ.95,700/- முத்தாரம்மன் கோசாலை பசு பாதுகாப்பு சங்கம் என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்தனர்.

- இதற்கிடையில் எங்களது இரண்டு காளைமாடுகளில் ஒரு மாட்டின் காலினை உடைத்து காயம் ஏற்படுத்தியதற்கு நஷ்ட ஈடு கோரியும் மற்றும் எங்களது இரண்டு காளை மாடுகளையும் திரும்ப வழங்க வேண்டி 28.03.2025 நாளிட்ட மனுவினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு. மற்றும் உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலருக்கும் சமர்ப்பித்தேன்.

- இம்மனு மீது நடவடிக்கை எடுக்கப்படாததால் நான் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு W.P.(MD) No.10560 of 2025 தொடுத்து 21.04.2025 நாளிட்ட தீர்ப்புரையில் மேற்காணும் எனது 28.03.2025 நாளிட்ட மனுவினை விசாரணை செய்து சட்டவிதிகளுக்குட்பட்டு உரிய ஆணையினை 2 மாத காலத்திற்குள் வழங்கிடுமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆணையிட்டுள்ளது என தெரிவித்து இதன் நகலினை சமர்ப்பிக்கிறேன்.

- எங்களது இரண்டு காளைமாடுகளில் ஒரு காலை உடைக்கப்பட்ட காளைமாடானது 09.04.2025 அன்று உயிர் இழந்து உள்ளதை உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் இன்றுதான் தெரியவருகிறது.

- எனவே எங்களது காளைமாடுகளை மீட்டு தருவதற்கும் மற்றும் உரிய நஷ்டஈடு வழங்குவதற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்த பேரூராட்சி அலுவலர் மீது உரிய நடவடிக்கை

மேற்கொள்ளுவதற்கும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) திரு. க. திருமலைக்குமார் என்பவர் 03.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

- தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கால்நடைகள் சுற்றி திரிந்து, பொதுமக்களுக்கு இடையூறும் மற்றும் உயிர்சேதம் ஏற்படுவதாக வரபெற்ற புகார்களின் அடிப்படையில் வார்டு எண் 1–ல் உள்ள சிதம்பர தெருவில் சுற்றி திரிந்த மனுதாருக்கு சொந்தமான 2 காளை மாடுகளை 26.12.2024 அன்று இரவு 8.00 மணியளவில் பிடிக்கப்பட்டது. இரவு 9.30 மணிக்கு மேல் கோசாலையில் மாடுகளை ஒப்படைக்க முடியாது என்பதால் பேரூராட்சி அலுவலகத்தில் பராமரித்து மறுநாள் 27.12.2024 அன்று குலசேகரப் பட்டணம் முத்தாரம்மன் கோசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

- பிடிக்கப்பட்ட 2 காளை மாடுகளின் உரிமையாளர் என தெரிவித்து திரு. த. சக்திகுமார் என்பவர் பேரூராட்சி பணியாளர்களை மாடுகள் பிடிக்கும் பணியினை செய்யவிடாமல் தடுத்தும், அவதுாறாக பேசியும், சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதற்கு காரணமாக இருந்ததால் திரு. சக்திகுமார் என்பவர் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டது.

- இதனை தொடர்ந்து 2 காளை மாடுகளை திரும்பப் பெறுவதற்கு மனுதாரர் விண்ணபப்ம் செய்தார். மாடுகளின் உரிமையாளர் என்பதற்கான ஆவணங்களையும் மற்றும் கோசாலைக்கு செலுத்தப்பட வேண்டிய பராமரிப்பு கட்டணம் மற்றும் மருத்துவச் செலவு உட்பட ஒரு மாட்டிற்கு ரூ.47,850/– வீதம் 2 மாடுகளுக்கு ரூ.95,700/– தொகையினை முத்தாரம்மன் கோசாலை பசு பாதுகாப்பு சங்கம் என்ற பெயரில் வங்கி வரையோலையாக செலுத்தப்பட வேண்டும் என மனுதாரருக்கு பேரூராட்சி கடித ந.க.எண்.188/2024, நாள்.28.01.2025 மூலம் தெரிவிக்கப்பட்டது.

- இதற்கிடையில் 26.12.2024 அன்று பேரூராட்சி வாகனத்திலிருந்து கால்நடைகளை இறக்கியபோது மனுதாரரின் ஒரு காளை மாடு மிரண்டு வாகனத்திலிருந்து குதித்ததில் அதன் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு 27.12.2024 அன்று குலசேகரப் பட்டணம் கோசாலையில் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அக்காளை மாட்டிற்கு தொடர்ந்து காய்ச்சல் இருந்து, மேல்சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் 09.04.2025 அன்று மேற்படி காளைமாடு உயிரிழந்தது.

- உயிரிழந்த காளை மாட்டினை அரசு மருத்துவரால் உடற்கூராய்வு செய்யப்பட்டதில் அம்மாட்டின் வயிற்றில் 4 கிலோ அளவில் பிளாஸ்டிக் கழிவுகள் இருந்ததால் செரிமானம் இல்லாமல் உயிர் இழந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இந்நிலையில் மேற்படி காளைமாட்டிற்கு மனுதாரரால் உரிய அபராத கட்டணம் செலுத்தப்படாமல், கோசாலையில் உள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் திருமதி. த. பாப்பு அம்மாள் என்பவரின் புகார் மனு, அவரது மகன் திரு. த. சக்திகுமார் என்பவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திருமதி. த. பாப்பு அம்மாள் என்பவர் தனது 30.04.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பரணி மோட்டார்ஸ் தோட்டக்காட்டு பகுதியில் தங்களுக்கு சொந்தமான 2 காளை மாடுகள் போக்குவரத்துக்கு இடையூறாக சாலையில் சுற்றித் திரிந்ததாக உடன்குடி பேரூராட்சி ஊழியர்கள் விதிமீறி பிடித்துச் சென்று, 1 காளை மாட்டின் காலை உடைத்து உள்ளனர் என புகாராக தெரிவித்து மாடுகளை திரும்பப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாகவும், பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் வகையிலும் பொது சாலைகளில் கால்நடைகள் சுற்றி திரிகின்றன என பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார்கள் மற்றும் பத்திரிக்கை செய்திகளின் அடிப்படையில், மாடு வளர்ப்பவர்களுக்கு உரியவாறு அறிவிப்பு வழங்கியும், ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தப்பட்டும் அதனையும் மீறி சாலையில் சுற்றித்திரிந்த மாடுகளை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 106(2)-ன்படி கால்நடைகளை அப்புறப்படுத்தும் பணி நடைபெற்றபோது, பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1, சிதம்பர தெருவில் சுற்றித் திரிந்த மனுதாரரின் 2 காளை மாடுகள் 26.12.2024 அன்று இரவு 8.00 மணி அளவில் பிடிக்கப்பட்டு பேரூராட்சி வாகனத்திலிருந்து கால்நடைகளை இறக்கிய போது மனுதாரரின் 1 காளை மாடு மிரண்டு வாகனத்திலிருந்து குதித்ததில் அதன் வலது கால் எலும்பு முறிவு ஏற்பட்டது என பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் வாயிலாக தெரிய வருகிறது.

மனுதாரரின் காளை மாடுகளை பணியாளர்கள் பிடிக்கும் போது, பணி செய்ய விடாமல் மாடுகளின் உரிமையாளர் திரு. த. சக்திகுமார் என்பவர் பணியாளர்களை தாக்கியதால் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பது பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணத்தின் வாயிலாக தெரிய வருகிறது.

பேரூராட்சி பணியாளர்களால் 26.12.2024 அன்று பிடிக்கப்பட்ட 2 காளை மாடுகளையும் 27.12.2024 அன்று குலசேகரப்பட்டணம் முத்தாரம்மன் கோசாலையில் ஒப்படைக்கப்பட்டு, எலும்பு முறிவு ஏற்பட்ட காளை மாட்டிற்கு தொடர் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதற்கிடையில் மாட்டின் உரிமையாளர் திரு. த. சக்திகுமார் என்பவர் தனது 30.12.2024 நாளிட்ட மனுவில் காளை மாடுகளை திரும்ப ஒப்படைக்குமாறு கோரிய விண்ணப்பத்திற்கு, பேரூராட்சி செயல் அலுவலர் 10.01.2025 நாளிட்ட கடிதத்தில் கால்நடைகள் திரு. சக்திகுமார் என்பவருக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டும், எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை. திரு. சக்திகுமார் என்பவர் தனது 28.01.2025 நாளிட்ட மனுவில் மாடுகளை திரும்பப் பெறுவதற்கான அபராதக் கட்டணம் குறித்து விளக்கம்

கோரப்பட்டதில், பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித குறிப்பு ந.க.எண். 188/2024, நாள் 28.01.2025-ல், 27.12.2024 முதல் 28.01.2025 வரையுள்ள 33 நாட்களுக்கு ஒரு மாட்டிற்கு பராமரிப்பு ரூ.47,850 வீதம் 2 மாட்டிற்கு ரூ.95,700 தொகையினை முத்தாரம்மன் கோசாலை பாதுகாப்பு சங்கம் என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது.

இதற்கிடையில் குலசேகரப்பட்டணம் கோசாலையில் ஒப்படைக்கப்பட்ட மனுதாரரின் எலும்பு முறிவு ஏற்பட்ட காளை மாட்டிற்கு தொடர் காய்ச்சல் ஏற்பட்டு, மேல் சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் 09.04.2025 அன்று அக்காளைமாடு உயிரிழந்தது என்பதையும், மாட்டினை உடற்கூராய்வு செய்யப்பட்டதில், அதன் வயிற்றில் சுமார் 4 கிலோ அளவில் பிளாஸ்டிக் கழிவுகள் இருந்ததால் செரிமானம் இல்லாமல் உயிரிழந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த உடற்கூராய்வுச் சான்றின் மூலம் தெரிய வருகிறது.

முறையீட்டு மனுதாரரின் மகன் திரு. த. சக்திகுமார் என்பவர் 03.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது, கால் உடைக்கப்பட்ட காளைமாடானது 09.04.2025 அன்று உயிரிழந்தது என்கிற தகவல் பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் இன்று (03.06.2025) தான் தனக்கு தெரிய வருகிறது என தெரிவித்துள்ளார்.

மேலும் திரு. த. சக்திகுமார் இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணையின்போது, பேரூராட்சியால் பிடிக்கப்பட்ட காளை மாடுகளை திரும்ப வழங்க வேண்டியும், அதில் 1 காளைமாட்டின் காலை உடைத்ததற்கான நஷ்ட ஈடு வழங்கக் கோரியும் திரு. த. சக்திகுமார் என்பவர் 28.03.2025 நாளிட்ட மனுவினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கும் மற்றும் உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கும் சமர்ப்பித்து, அதில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால், தான் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு (W.P. (MD) No.10560 of 2025) தொடுத்து 21.04.2025 நாளிட்ட தீர்ப்புரையும் பெற்றுள்ளதாக தெரிவித்து அதன் நகலை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

திரு. த. சக்திகுமார் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட W.P.(MD) No.10560 of 2025 வழக்கில் 21.04.2025 நாளிட்ட தீர்ப்புரையில் திரு. த. சக்திகுமார் என்பவர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பித்த 28.03.2025 நாளிட்ட மனுவினை விசாரணை செய்து, சட்ட விதிகளுக்குட்பட்டு தகுதியின் அடிப்படையில் உரிய ஆணையினை 2 மாத காலத்திற்குள் வழங்கிடுமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்காணும் வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழங்கப்பட்ட 21.04.2025 நாளிட்ட தீர்ப்புரையில் வழக்கின் முதலாவது எதிர்மனுதாரரான தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர், மனுதாரர் திரு. த. சக்திகுமார் என்பவரின் 28.03.2025 நாளிட்ட மனுவினை விசாரணை செய்து உரிய ஆணையினை 2 மாதக் காலத்திற்குள் வழங்கிடுமாறு அளித்த தீர்ப்பினை நிறைவேற்றும் வகையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று உயர்நீதிமன்ற ஆணையினை நிறைவேற்ற உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரருக்கு சொந்தமான 2 காளைமாடுகளை தெருவில் சுற்றித்திரிந்ததாக 26.12.2024 அன்று பேரூராட்சியினரால் பிடிக்கப்பட்டு அதில் 1 காளை மாட்டின் கால் உடைந்து 09.04.2025 அன்று உயிரிழந்தது என்கிற தகவல் பேரூராட்சியால் மனுதாரருக்கு உடனடியாக தெரிவிக்கப்படாமல் இம்முறைமன்ற நடுவத்தில் 03.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போதுதான் இத்தகவல் தெரியவருகிறது என மனுதாரரின் மகன் திரு. த. சக்திகுமார் என்பவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதன் மூலம் காளைமாடு இறந்த செய்தியை உடனடியாக தெரிவிக்காத உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அலட்சியப் போக்கினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. த. பாப்பு அம்மாள்,
   எண். 1/11, பி, பள்ளிக்கூட தெரு
   வடக்கு காலன் குடியிருப்பு,
   உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி,
   தூத்துக்குடி மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
   (பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
இருப்புக்கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032